# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 13 JULY 15, 2003 பாலம் 14



வீடு விற்க,வாங்க...

Raja M. Mahendran, P. Eng.
(Vice president/Sales Rep.)




HOMELIFE HIGHER STANDARDS

எமது நிறுவனத்தில் தொழில் புரிய வீட்டு, வியாபார பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்.

Direct: 416.315-9397

OFFICE: 416.321-6969

Spelling Bee

அஸ்வின் பாஸ்கரன் மூன்று வருடங்களுக்கு முன்னர் இப்போட்டியில் பங்கு பற்றி இறுதி வரை வந்து சம்பியன்ஆக முடியாமல் திரும்பியவர். மீண்டும் இப்போது மிகவும் உற்சாகத்துடன் வந்து Champion பட்டத்தை தட்டிச் சென்றுள்ளார். இவர் இலங்கையைச் சேர்ந்த பாஸ்கரன் நித்திலா தம்பதிகளின் புதல்வன். இவரை இப்போட்டிக்கு பயிற்சி அளித்தவர் இவரின் பேத்தியாவர்.

SBOC யினை ஆரம்பித்தவரும் அதன் தற்போதைய தலைவருமான Juile Spence என்பவர் கூறுகிறார்; 1987இல் இப் போட்டியை தான் ஆரம்பிக்கும்போது 30 மாணவர்களே பங்கு [illegible]றியதாகவும் இப்போது ஒன்ராரியோ மாகாணம் முழுவதும் [illegible]ள்ள 23 இடங்களில் இப்போட்டியின் அரைஇறுதி தெரிவு நடை-பெற்றதாகவும் கூறுகிறார். அவர் விரைவில் இப்போட்டியை கனடா முழுவதற்குமாக நடத்தப்போவதாக கூறினார்.

'Uncanny' என்ற சொல்லை எழுத்துக்கூட்டி ஒன்பதுவயதுச் சிறுவனான அஸ்வின் பாஸ்கரன் SBOC (Spelling Bee of Canada) என்ற நிறுவனத்தால் நடத்தப்பட்ட 'எழுத்துக்கூட்டல்' போட்டியில் Junior Champion ஆக வந்துள்ளார். 1987 ஆம் ஆண்டில் இருந்து SBOC என்ற நிறுவனம் 'எழுத்துக்கூட்டல்' போட்டியை ஒன்ராரியோ மாகாணத்தில் நடத்தி வருகிறது. இது இப்போட்டியை நாலுபிரிவாக Primary - 6 வயது தொடக்கம் 7 வயது வரை Junior - 8 வயது தொடக்கம் 9 வயதுவரை Intermediate - 10 வயது தொடக்கம் 11 வயதுவரை, Senior - 12 வயது தொடக்கம் 13 வயதுவரை நடத்தி வருகிறது. இப்போட்டியில் கிட்டத்தட்ட 20,000 ஒன்ராரியோ மாணவர்கள் பங்கு பற்றியிருக்கிறார்கள். இந்நிறுவனத்தை பற்றி மேலும் அறிய www.SpellingBee of Canada.ca என்ற இணையதளத்திற்கு செல்லவும்.

## ஹைக்கூக் கவிதைகள்

ஹைக்கூ (Haiku) என்பது ஒருவகை யப்பானியக் கவிதை. யப்பானிய மொழிப்பன்மையில் 'ஹைக்கூ' என்ற சொல் 'கவிதைகள்' என்ற பொருளில் வழங்குகின்றது. ஒரு மையில் அது ஹைக்கூ கவிஞர்களைக் குறிக்கும். ஆயினும் சொல்லின் அடிப்பொருளை ஆராயின் 'கருப்போன்றும் உயிரணுப்போன்றும் உருவானதொரு கவிதை' என்னும் பொருள் வெளிப்படுவதைக் காணலாம். தமிழில் திருக்குறள் தோற்றத்தால் சிறிதாகவும் பொருளால் ஆழமாகவும் இருப்பதுபோல ஹைக்கூவும் அளவால் சிறிதாகவும் பொருளால் மிகமிகப் பெரிதாகவும் உள்ளது.

அளவால் ஹைக்கூ 5-7-5 அசைகளைக் கொண்ட மூன்று வரிக்கவிதை. ஆயின், அதன் பொருள் தோண்டத் தோண்டத் தூண்டும் தங்கச் சுரங்கத்தைப் போன்றது. அள்ள அள்ளத் தரும் அட்சய பாத்திரம் போன்றது. இவ்வித விளக்கப் பாட்டுக்கு ஹைக்கூக் கவிதைகளை வளர்த்தெடுத்த பெருமை பாஷோ, பூசன், ஐசா, ஷிகி போன்ற கவிஞர்களுக்குரியது.

### மாத்சுயு பாஷோ

ஹைக்கூ ஏறத்தாழ நானூறு ஆண்டுகால வரலாறு உடையது. மாரிடாகே (1473-1549), சோகன் (1465-1553) ஆகிய இருவரையும் ஹைக்கூவின் முன்னோடிகள் என ஆய்வாளர் கருதுவர். எனினும் மாத்சுயு பாஷோவே (1644-1694) 'மகத்தான ஹைக்கூ ஆசிரியர்' என்று போற்றப்படுகன்றார். அவரின் கவிதைகள் இரண்டின் தமிழ் வடிவங்கள் பின்வருமாறு:

எப்போதாவது மேகங்கள்
நிலாப் பார்க்கும் மனிதனை
ஓய்வுறச் செய்யும்

நிலாவைப் பார்த்து இரசிக்கும் மனிதனுக்கு மேகங்கள் ஓய்வு கொடுக்கின்றனவாம். அதாவது, மேகங்கள் நிலாவை மறைக்கின்றன. எப்போதாவது என்ற சொல் மழை குறைவான ஒரு பருவத்தை உணர்த்துவதோடு மனிதனின் இயல்பான இயற்கை இன்ப உணர்வுக்கு ஏற்படக்கூடிய தடைகள் பற்றியும் சிந்திக்க வைக்கின்றன.

விடியல் ஒளி
வெள்ளி நிறச் சிறுமீன்
ஓர் அங்குல வெண்மை

இந்தக் கவிதையின் தலைப்பு "நிறத்தின் அடர்த்தி" என்பது. அதிகாலையில் கடற்கரையில் நிற்கின்றார் கவிஞர். வெள்ளைச் சிறுமீன் ஒன்று மேலெழுந்து விழுகின்றது. கணப்பொழுதில் நடந்த இந்நிகழ்ச்சியைக் கவிஞர் படம்பிடிக்கின்றார். செந்நிறப் பின்னணியில் மீனின் பாய்ச்சல் மின்னல் கீற்றைப்போல் பளிச்சிடுகின்றது. 'ஓர் அங்குல வெண்மை' எனக்கூறி வெண்மையின் அடர்த்தியை பிரகாசத்தை வெளிப்படுத்துகின்றார். (தொடர்ச்சி 4ஆம் பக்கம்)


Since 1987

வசந்தா நகை மாளிகை

வசந்தன் - பத்மநாதன்

பத்தர்களின் கைவண்ணத்தில் தங்கத்தின் புதிய வடிவங்கள்!

TEL: 905 848 5151
OPEN 10:30AM - 8:30PM

FAX: 905 848 8502
MONDAY CLOSED

3025 HURONTARIO ST., UNIT. 103A, MISSISSAUGA

Singapore Communication
Since 1991

We Sell New & Used Cell Phones, Pagers & Accessories For

WE HAVE PRICE PLANS & PHONES TO SUIT YOUR NEEDS.

More Info, Call: 416-740-5292
5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.




Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability

- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business



416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

9.00A.M - 9.00P.M


Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்



# செய்யும் தொழிலில், வெற்றி பெற



எந்தத் தொழிலை தொடங்கினால் வெற்றிகரமாக இருக்கும் என்று பலரும் கேட்கிறார்கள்? அந்தக் கேள்விக்கான பதிலை இங்கு இப்போது ஆராய்வோம்.

உங்கள் வியாபாரத்திற்கான மூல சிந்தனை தவறானதாக இருந்தால், எத்தகைய கடின உழைப்பும், அதிகப்படியான மூலதனமும் கூட அதைச் சரி செய்து விட முடியாது.

சென்னையிலிருந்து சில மாதங்களுக்கு முன்னர் சிவில் இஞ்சினியர் நண்பர் ஒருவர் கனடாவில் மிஸிஸாகாவில் குடியேறியிருக்கிறார். சென்னையில் 2 கார், செல்போன் என்று சொந்தத்தில் கட்டிடம் கட்டும் தொழிலைச் சிறப்பாகச் செய்து கொண்டிருந்தவர். ஆகா வெளிநாடு என்று கனடா வந்து இப்போது என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்.

சென்னையிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யலாமா? அல்லது இங்கும் கட்டிடம் கட்டும் தொழிலில் பழகி சொந்தத்தில் தொழிலை ஆரம்பிப்போமா என்று யோசிக்கிறேன் என்றார். இறக்குமதியை விட உங்களுக்குப் பழகிய, பிடித்த தொழிலே சிறந்தது என்று அவருக்கு அறிவுரை கூறினேன். சந்தேகமில்லாமல் கட்டிடம் கட்டும் தொழிலில் இங்கும் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதும், பிறகு அதிலேயே சொந்தத் தொழிலைத் தொடங்குவதும் நன்மையைத்தரும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அவரிடம் துடிப்பும், நிர்வாகத் திறமையும் உள்ளது. மூலதனமும் போட முடியும். பிறகென்ன? கனடாவைப் புரிந்து கொள்ள வேண்டும். கனடாவுக்கும், இந்தியாவுக்கும் உள்ள வித்தியாசங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**பெரி. முத்துராமன்**

வெற்றியைக் காப்பியடிக்க வேண்டும் என்று வெள்ளையர்கள் சொல்கிறார்கள். உண்மை தான் என்று தோன்றுகின்றது. புதிதாக ஒரு தொழிலைத் தொடங்கும் போது தனக்கோ, பிறருக்கோ வெற்றியைத் தந்த தொழிலையே தொடங்குதல் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கும்.

ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கும் போது, அது கீழ்க்கண்ட எல்லாவற்றையுமே அல்லது ஒன்றிரண்டையாவது பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

* உங்கள் பொருளோ, சேவையோ சிறப்பானது.
* சந்தை விலையினும் சற்றே குறைவானது.
* உபயோகிக்க மிக வசதியானது.
* மக்களின் தேவையை (Needs) பூர்த்தி செய்கின்றது.

உதாணத்துக்கு நம்முடைய நண்பர் கூரைப்பொருள் (Roofing Product) வியாபாரத்தை ஆரம்பிக்கிறார் எனக் கொள்வோம். அதை எவ்வாறு ஆரம்பிக்கலாம் என்பதற்கு ஒரு வரைபடம் கொடுப்போம். அவரும், அவரிடம் வேலை செய்யும் தொழிலாளர்களும் நட்பானவர்கள்; தொழில் தெரிந்தவர்கள். அவர் ஒரு வீட்டில் வேலை செய்யும் போது பலரும் பார்க்க வேலை செய்கிறார்கள். அதை ஒரு விளம்பரம் ஆகவும் ஆக்கிக் கொள்கிறார்கள். வேலை செய்து முடிக்கும் போதும், தங்கள் நேர்த்தியையும் தொழில் ஒழுங்கையும் வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் வேலை செய்த இடத்தில் ஒரு சிறு ஆணியோ, குப்பையோ கூட நாள் முடிவில் கிடப்பதில்லை.

வேலை செய்யும் இடத்தில் தங்கள் தொழிலைப்பற்றிய அறிவிப்புப்பலகை (Sign Board) ஒன்றை வைக்கிறார்கள். இதுவும் விளம்பரமே. தெருவில் போவோர், வருவோர் எல்லாவற்றையும் பார்க்கிறார்கள். சிலர் கேள்விகளும் கேட்கிறார்கள். பதில் சொல்லும் போது நட்பும், இலவச ஆலோசனையும் வெளிப்படுகின்றது.

கேள்வி கேட்டவரின் பெயரும், போன் நம்பரும் கவனமாகக் குறித்துக் கொள்ளப்படுகின்றது. இரண்டு வாரங்கள் கழித்து அவருடன் மீண்டும் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளப்படுகின்ற வேலை வாங்கும் போது என்ன உத்திரவாதம் அல்லது உறுதிமொழி கொடுக்கப்பட்டதோ, அதற்குச் சற்றும் மாறாமல் வேலையைச் செய்து முடிக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களை நேர்மையான முறையில் வீட்டு உரிமையாளர்களிடம் விவரிக்கிறார்கள். எல்லாவற்றைப் பற்றியும் தொடர்ந்து வாடிக்கையாளரிடம் சொல்லி, நேர்மையான முறையில் வேலையைச் செய்து முடிக்கும் போது அவர் திருப்தி அடைகிறார். அவர் திருப்தி அடைந்தாரா என்றும் உறுதி செய்து கொள்கிறார்கள். புதிய தொழிலோ, அல்லது நன்றாக நடந்து வரும் தொழிலோ, இரண்டிலுமே வாடிக்கையாளரின் உறவு முக்கியமானது. புதிய தொழிலில், குறிப்பாக, வாடிக்கையாளரிடம் நீங்கள் புதிதாகத் தொழில் தொடங்கியுள்ளீர் என்பதைக் குறிப்பிடும் போது, அவருடைய ஊக்குவிக்கும் வார்த்தைகள் உங்கள் தொழிலுக்கு உரம் இடும். அவ்வாறு நல்ல வார்த்தைகள் உங்களைப் பற்றியும், நீங்கள் செய்த தொழிலைப் பற்றியும் குறிப்பிடும் போது, அதற்கு ஒரு அத்தாட்சிக் கடிதத்தை அவரிடம் இருந்து பெற்று, அவர் அனுமதியோடு, விளம்பரத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வாடிக்கையாளரிடம், நண்பர் செய்யும் (அல்லது செய்ய நினைத்துள்ள) பிற சேவைகளைப் பற்றியும் - உதாரணத்துக்கு புதிய ஜன்னல்கள், கதவுகள் பொருத்துதல் - சொல்லப்படுகின்றது. நண்பர் அடுத்தமுறை வாடிக்கையாளர் அவரின் சேவையைப் பயன்படுத்தும் போது விலையில் 10 சதம் தள்ளுபடி கொடுக்கிறார். இதேபோல ஒரு வாடிக்கையாளர், மற்றெரு வாடிக்கையாளரை அறிமுகப்படுத்தும் போதும், அவருக்கு சிறிய பரிசு கொடுக்கப்படுகின்றது. அல்லது குறைந்த பட்சம் நன்றி தெரிவித்து ஒரு கார்டு அனுப்பப்படுகின்றது.

இத்தகைய செயல்களின் நோக்கம், முடிந்த வழிகளில் எல்லாம் வாடிக்கையாளரின் பாராட்டைப் பெறுவதே. அத்தகைய பாரட்டு விளம்பரம் ஆகும். விளம்பரம் மேலும் வியாபாரத்தைப் பெருக்கும். பிறகு தொழில் சற்று வளர்ந்த பிறகு, அழகான விளம்பர வாசகங்கள் கொண்ட விளம்பர அட்டைகள் தயாரிக்கப்படுகின்றது. இருக்கும் வாடிக்கையாளர்க்கு ஆறுமாதங்களுக்கு ஒரு முறை சேவையைப் பற்றிய புதிய தகவல்கள், தள்ளுபடி, பிற உபயோகமான விவரங்கள் தரப்படுகின்றன. அதன்பிறகு ஒரு மின்தளம் ஆரம்பிக்கப்படுகின்றது. அந்த மின்தளத்தில் நண்பர் தான் செய்யும் தொழிலில் உபயோகப்படுத்தும் தரமான பொருட்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். Frequently Asked Questions (FAQ) பகுதியும் இணைய தளத்தில் இடம் பெறுகின்றது. இணைய தளத்தில் அவர் தொழிலில் தரும் உத்தரவாதங்களும் இடம் பெறுகின்றது. பெற்ற நற்சான்றுப்பத்திரங்களும் இடம் பெறுகின்றன.

இணைய தளத்தில் நண்பரின் புகைப்படமும், நன்றாக சீருடை அணிந்த அந்த நிறுவனத்தில் பணிபுரியும் மற்றவர்களின் புகைப்படமும் கூட இடம் பெறுகின்றன. இவையெல்லாம் வாடிக்கையாளரின் மனதில் ஒரு நல்ல அபிப்பிராயத்தை உருவாக்குகின்றது. நாளடைவில் கட்டிடத்தொழிலில், நுகர்வோர் எதை பற்றியெல்லாம் குறைகூறுகிறார்கள் என்பதை நண்பர் தெரிந்து கொள்கிறார். அவற்றை எவ்வாறு தீர்க்க முடியும் என்பதை தன்னுடைய இணைய தளத்தில் குறிப்பிடுகின்றார். தபால் செலவில்லாமல் பலருடனும் மின் அஞ்சல் வழி தொடர்பு கொள்ளுகிறார். மொத்தத்தில் பலரும் நண்பரின் நிறுவனத்தைப் பற்றி, நட்பான, தொழில் நேர்த்தி நிறைந்த, நியாயமான நிறுவனம் என்று அபிப்பிராயம் கொள்கிறார்கள். பிறகென்ன: சில ஆண்டுகளுக்கு பின்பு கனடாவிலும் நண்பர் மோட்கேஜ் இல்லாத சொந்த வீடு, கடனில் பெறாத இரண்டு கார் என்று வசதியான வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்குகிறார்.

*உங்கள் தொழிலில் நீங்கள் வெற்றி பெற்றவரா? உங்கள் வெற்றி மேலும் பலருக்கு முன் உதாரணமாக அமையலாம். உங்கள் வெற்றிச் செய்தியைக் கேட்க நாங்கள் விரும்புகிறோம். சொல்ல நீங்கள் தயாரா? அப்படியானால் இக் கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

*உங்கள் தொழிலில் உங்கள் நேரத்தையும் பொருளையும் சேமிக்க, இலாபத்தை அதிகரிக்க, ஆலோசனைகளுக்கும், மறு ஆலோசனைகளுக்கும் திரு. பெரி. முத்துராமனுடன் தொடர்பு கொள்ளுங்கள். இவருடைய Success Biz Solution நிறுவனத்தின் வாயிலாக பல தொழில் முனைவர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். நீங்களும், இன்றே பயன் அடைய இப்போதே 416 430 0623 அல்லது (C) 416 278 2026 இல் தொடர்புகொள்ளுங்கள்.*

*பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu Businesslime மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.*


SAFETY TRUCKS
Training School Ltd.

Training & Trucking

Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது
தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம்
(9ஆம் ஆண்டு)

We Accept Welfare & Unemployment Insurance

வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




In Classes
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

16 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(905) 793-9546 / (416) 616-5979
250 Summerlea Road, Brampton, ON

# APPLEMORE AUTOMOTIVE

**உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing

* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**
**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL






## சுவாமி விபுலாநந்தர் மன்றம் - கனடா

### நடத்தும் சுவாமி விபுலாநந்தர் நினைவு விழாவும் கண்காட்சியும்.

யாழ்நூல் தந்த உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரின் அறிவுத்திறன், அவரது ஆக்கங்கள், அவரது பன்முகப்பட்ட சேவைகள் முதலியனவற்றை உலகறியச் செய்யவும், இளம் சமுதாயத்தினருக்குத் தமிழ்ப் பண் பாட்டுணர்வை மேலோங்கச் செய்யவும் இப்பெருவிழா நடத்தப்படுகின்றது.

* கண்காட்சி
* போட்டி நிகழ்ச்சிகள்
* கலை நிகழ்ச்சிகள்
* சிறப்புமலர் வெளியீடு.

என்பன இவ்விழாவில் இடம்பெறவுள்ளன.

காலம்: 2003 ஜுலை 19 ஆம் திகதி சனிக்கிழமை
இடம்: சேர். ஜோன் மக்டொனால்ட் கல்லூரி, ஸ்காபரோ

---

உலக ஆன்மீக பல்கலைக்கழகம்

## இராஜயோகம்

உலக தமிழ் சேவை வழங்கும் ஆத்மதீபம் ஏற்றிடுவோம்
ஞாயிறு 20ஆம் திகதி யூலை மாதம் 2003, நேரம்- 5.30 மணி
கனடா கந்தசாமி கோவில் மண்டபம் (எக்ளின்ரன் அவெனியுவுக்கு - தெற்கே)
அனுமதி இலவசம் (இலாபகரமற்ற நிறுவனம்)
சிறியோர் முதல் பெரியோர் வரை திரண்டு வந்து ஆனந்தத்தை அடைந்து செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம். விபரங்களுக்கு-(905)415-8649 அல்லது 416-537-3034

---

## தமிழ் 2003 ஒலிம்பிக்ஸ்

August 2, 3 2003, YORK UNIVERSITY STADIUM, (Steele & keele)
416-335-0622
உலகத்தமிழர் இயக்க மாணவர் அமைப்பு

---

## கிரியா யோகப் பயிற்சி & தியானம்

ஆரோக்கியம், ஆயுள் விருத்தி அளிக்கும் புராதன கிரியா யோகப்பயிற்சி தியான வழிமுறைகளை உலகெங்கும் பரப்பிவரும் அலகபாத்தைச் சேர்ந்த யோகி சத்தியம் அவர்கள் யூலை 28 முதல் செப்ரெம்பர் 21ஆம் திகதிவரை ஒன்ராரியோவில் மிசிசாகா, ஸ்காபரோ, ரொறன்ரோ, மார்க்கம், கிச்சினர் போன்ற பகுதிகளில் தனது இலவச வகுப்புகளை நடத்துவார். மேலதிக விபரங்களுக்கு - கோபல் சிங் : 416-281-9000 / www. kriyayoga_yogisatyam.org

---

## தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் - கனடா

T. S. S. A - CANADA

தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் - கனடா நடத்தும் "ஒரு நாள் விளையாட்டு விழா" Sports Festival எதிர்வரும் ஆகஸ்ட் (August ) 9ஆம் திகதி சனிக்கிழமை ஜோக் பல்கலைக் கழகத்தில் (TRACK & FIELD CENTRE, YORK UNIVERSITY) காலை 9 மணி முதல் மாலை 9 மணிவரை நடைபெறும்.

காலை 9மணிக்கு பெண்கள், ஆண்கள் அணிநடையுடன் ஆரம்பமாகவுள்ள மேற்படி விளையாட்டு விழாவில், வலைபந்தாட்டம் (Net Ball), துடுப்பாட்டம் (Cricket), உதைபந்தாட்டம் (Soccer) 15 வயதின் கீழ் ஆண்கள் - உதைபந்தாட்டம், கரபந்தாட்டம்(Volley Ball) 4 x 100 மீற்றர் அஞ்சலோட்டம் (Relay), விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகளும் இடம்பெறும். விண்ணப்பப் படிவங்கள் (Entries) வெள்ளிக்கிழமை, யூலை (July) 25ஆம் திகதிக்கு முன் திரு. A. ஜோகரத்தினத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டப்போட்டி (Basket ball) செப்ரெம்பர் (September) மாதம் முதல் முறையாக ஆரம்பமாகவுள்ளது. தொடர்புகளுக்கு: ஜோகரத்தினம்: 416-499-0731
அன்ரன் : 416-287-3402, ரவீந்திரன் 416-754-2195

---

### சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவ ஆசிரியர் சங்கத்தின் கனடா ஒன்றுகூடலும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவ ஆசிரியர் சங்கத்தின் கோடைகால ஒன்றுகூடல் வருகிற ஒகஸ்ட்மாதம் 16ஆம் திகதி (August 16th 2003) சனிக்கிழமை காலை 10மணி தொடக்கம் மாலை 6மணிவரை மோனிங் சைட் பூங்காவில் பகுதிகள் (மூன்றிலும் & நான்கிலும்) (Morningside park Units 3 & 4) வழமை போல் நடைபெறவுள்ளது.

16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டு போட்டிகளும் மற்றும் பல நிகழ்ச்சிகளும் இடம்பெறும். புதிய நிர்வாகசபைத் தெரிவு பகல் 12 மணிக்கும் 1 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெறும். சகல பழைய மாணவர்கள் / ஆசிரியர்கள் தத்தம் குடும்பத்துடன் வருகைதந்து ஒன்று கூடலை சிறப்பித்து மதிய போசன உணவிலும், மாலை B.B. Q., தேநீர் விருந்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். வருகை தருபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள் திரு. நல்லையா ரவீந்திரன் 416-754-2195
திரு. ரேஜி தவரத்தினம் 416-446-2965


# LARGE INDOOR PUBLIC CAR AUCTION

**EVERY WEDNESDAY EVENING**
**STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM**

**100+ VEHICLES ON DISPLAY INDOORS**

**INCLUDE MANY LATE MODEL**
> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
>V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

**WEEKLY CASH BUYERS DRAWS OPEN**
**MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM**
**FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM**
**1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ONTARIO.**

**CIA PUBLIC AUTO AUCTION & SALES**
**416 - 242 - 5052**
www.cialeasing.com



# அன்புத் தமிழ்

<u>ஹைக்கூக் கவிதைகள்</u>

1ஆம் பக்கத் தொடர்ச்சி

பாஷோவின் காலத்திலே தான் ஹைக்கூக் கவிதை பூத்துக் குலுங்கியது. வாழ்க்கையே கவிதை, வாழ்க்கையின் சிக்கல்களுக்குக் கவிதையே மருந்து என்னும் உயர்ந்த நோக்கத்தை கொண்டிருந்த அவரின் கவிதைகள் அவரது வாழ்க்கை அனுபவங்களைப் பெரிதும் பிரிதிபலித்து நிற்கின்றன. அவரது வாழ்க்கை செழிப்பானதொன்றல்ல. எனினும் அவரது கவிதைகள் செழிப்பானவை; செறிவான பொருள்வளம் உடையவை.

'கவிதை, ஆழமான உணர்வுகளோடு, இதயத்திலிருந்து ஊற்றெடுக்க வேண்டும்' என்ற கருத்துடைய பாஷோவின் கவிதைகளில் இயற்கை விளையாடும்; நகைச்சுவை இழையோடும்; தத்துவமும் மர்மமும் சுழியோடும்.

<u>தமிழில் கைக்கூ</u>

தமிழ் மக்களுக்குக் ஹைக்கூவை அறிமுகஞ் செய்துவைத்த பெருமை பாரதியாருக்கு உரியது. ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு முன்னரே சுதேசமித்திரன் பத்திரிகையில் ஹைக்கூ வடிவம் பற்றி அவர் கட்டுரை எழுதி இருக்கின்றார். இதன்பின் 1968இல் 'நடை' இதழின் முதல் வெளியீட்டில் சி. மணி பத்து ஹைக்கூ கவிதைகளை மொழி பெயர்த்திருந்தார். மேலும் பல மொழி பெயர்ப்பு முயற்சிகள் ஹைக்கூவைத் தமிழுக்கு நன்கு அறிமுகப்படுத்தின.

முதன் முதலில் தமிழில் ஹைக்கூ படைத்தவர் அப்துல் ரகுமான் ஆவர். 1980இல் வெளியிடப்பெற்ற அவரது 'பால் வீதி' என்னும் கவிதைத் தொகுப்புக் ஹைக்கூ கவிதைகளையும் கொண்டிருந்தன. இவரைத் தொடர்ந்து பலர் ஹைக்கூ பாடத் தொடங்கினர். 1984 க்கும் 1992க்கும் இடைப்பட்ட காலத்தில் அதிக ஹைக்கூக் களைத் தமிழில் எழுதியவர் அமுதபாரதி. முதன்முதலில் தமிழில் ஹைக்கூ கவிதைத் தொகுதி வெளியிட்டவரும் இவரே. அமுதபாரதியைத் தொடர்ந்து இன்று ஹைக்கூ கவிஞர்கள் வரிசையில் அறிவுமதி, தமிழன்பன், கழனியூரன், மித்ரா, இதயகீதா, பரிமளமுத்து, செ.செந்தில்குமார், அவை நாயகன், கு.மோகனராசு, நிர்மலா சுரேஷ் ஆகியோர் முன்னனியில் நிற்கின்றனர்.
சில தமிழ் ஹைக்கூ கவிதைகள்:

அந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங் குழல்? - அமுதபாரதி

நிழலில் கொஞ்சம் இளைப்பாறலாம்
விழித்ததும் வெட்ட வேண்டும்
இதே மரத்தை....! - அவைநாயகன்

காகிதப் பூக்களின் சிரிப்பு
நீதிக்கும் நடிப்பு...
சாலமன் வருவரை... -நிர்மலா சுரேஷ்

## கவிஞர் வி. கந்தவனம்

ஹைக்கூ கவிதை பாடுவது எளிதன்று. கூர்மையான கவனிப்பு இதற்கு இன்றியமையாதது. இது பாதி திறந்த ஒரு கதவு. முழுவதையும் திறக்க வேண்டியது வாசகன் பொறுப்பு. நிர்மலா சுரேஷின் மேற்படி ஹைக்கூவில் கதவு பாதி மட்டுமே திறந்திருக்கின்றது. முழுவதையும் திறக்கையில், எது காகிதப் பூ, எது இயற்கை பூ என்ற பிரச்சனையைத் தீர்க்க மிகுந்த விவேகி சாலமன் செய்த பரிசோதனைக் கதை விரிவடைவதைக் காண்கின்றோம். இரு வகைப் பூக்களையும் யன்னல் அருகில் வைத்துக் கதவுகளை மெல்லத் திறந்து விட்டார் சாலமன்.

தேனீக்கள் மொய்த்த பூவே இயற்கையானது என்று தீர்ப்பளித்தார். போலியைக் கண்டு மருளும் உலகுக்கு உண்மை தெரிவதில்லை. உண்மை தெரியும்வரை போலி உலகை ஏமாற்றிக்கொண்டே இருக்கும். இவ்விதம் ஆழமான அர்த்தங்களை கொண்டிருப்பினும் ஹைக்கூ பிரசாரம் செய்வதில்லை. ஒரு காட்சியைக் காட்டுவதே அதன் பணி. அதனைப் பற்றி விவரிப்பதல்ல. நடப்பதை அப்படியே சித்தரிக்கும் இதனை 'நிகழ் கவிதை' என்றழைப்பர்.


<u>ஹைக்கூவும் புதுக்கவிதையும்</u>

ஹைக்கூவைப் புதுக்கவிதை என்று தமிழ் நாட்டில் பலர் கருதுகின்றனர். இக்கருத்துத் தவறானதாகும். புதுக்கவிதை முளைவிடத் தொடங்குவதற்கு முன்னரே ஹைக்கூ யப்பானில் பூக்கத்தொடங்கிவிட்டது. தமிழில் புதுக்கவிதை வளரத்தொடங்கியதன் பின் ஹைக்கூ பாடப்பட்டதால் அதுவும் புதுக் கவிதை எனப் பலர் கருத நேர்ந்தது. புதுக்கவிதையின் சில உத்திகள் ஹைக்கூவில் இருப்பது உண்மை. ஆனால் ஹைக்கூவின் பார்வை, அனுபவம், அணுகு முறை, பின்புலம், உத்திகள் என்பன தனித்துவம் வாய்ந்தவை. அது வெறும் உணர்ச்சிப் படையலன்று. எந்தக் கொள்கைக்கும் கட்டுப்பட்டதுமன்று.

குறிப்பு: இக்கட்டுரையின் பெரும்பகுதி திருமதி நிர்மலா சுரேஷ் அவர்கள் தமது முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு 'ஹைக்கூக் கவிதைகள்' என்ற பொருளில் அளிக்கப்பெற்ற ஆய்வு நூலைத் தழுவியதாகும்.)


**RASANAYAGAM ANTONYPILLAI, B.Sc. Agr.**

RE/MAX Golden Way Realty Inc.



வீடு விற்க, வாங்க, வாடகைக்கு பெற, பெற்றுக் கொடுக்க அழையுங்கள் - ராஜன் அன்ரனி

Office: 416-299-8199
Home: 416-516-9897
Pager: 416-510-7755

3390 MIDLAND AVE.
UNIT 8, TORONTO, ON.
M1V 5K3



கடந்த 6 ஆண்டுகளாக SUMMER CLASSES நடாத்திச் சாதனை புரிந்த

**V V TUTORING CENTRE**



தன் 2003க்கான

**Summer Classes - கோடை விடுமுறை வகுப்புகளை**

**02-07-2003ல் ஆரம்பிக்கின்றது**

Kennedy வளாகத்தில்
(McCowan & Eglinton)
காலை 8:30 முதல் மாலை 3:30 வரை
எல்லா வார நாட்களிலும்


Mississauga வளாகத்தில்
Jeya Thurka Temple Hall
மாலை 6:00 முதல் 9:00 வரைகுறிப்பிட்ட தினங்களில்
சனிக்கிழமைகளில் பிற்பகல் 2:00 மணி முதல் 5:00 மணி வரை

Markham வளாகத்தில்
(Middlefield & Elson)
காலை 8:30 முதல் மாலை 3:30 வரை
எல்லா வார நாட்களிலும்

சகல தரத்தினருக்கும், சகல பாடங்களும் ஒன்ராறியோவில் கற்பிப்பதற்கான தகுதி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

- கற்கை நெறிகள் ஜீலை, ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்களும் இடம் பெறும்

உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பினை, தரம் மிக்க கல்வியை உறுதி செய்து, நிம்மதியாக உங்கள் வேலைகளில் ஈடுபட நாடுங்கள்.



**வீ.வீ ரியூரறிங் சென்ரர்**

(416) 701-1763 / (905) 471-3084

(தயவு செய்து தொலைபேசியில் தங்கள் செய்தி விபரத்தைப் பதிவு செய்யவும்)
எங்கள் சேவை உயர்ந்தது! எங்கள் மாணவர் முன்னணியில்!!
எங்கள் கட்டணம் குறைந்தது!!!







# ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**

### How to Develop The Super Power Memory ஞாபகசக்தி வரை

நினைவாற்றலை வளர்த்துக்கொள்வது எப்படி என்கிற வினாவுக்கு உளவியல் ரீதியில் விளக்கமளிக்கும் போது இதனை மூன்று பகுதியான வழிகளில் ஆராய வேண்டிய ஒரு கேள்வியாகும்.

(1) நினைவாற்றல் என்றால் என்ன?
(2) மறதி ஏன் ஏற்படுகிறது?
(3) நினைவாற்றலை வளர்க்க வழிமுறைகள் என்ன?


நினைவு என்பது மூன்று வகைப்படும்.
புலன்காட்சிகளை உள்ளடக்கியது குறுகிய கால நினைவு. மிககுறுகியகாலம் இருந்து மறைவது. குறுகியகால நினைவு என்பது தேவையைப் பொறுத்து அமைவது. சிலரது தொலைபேசி எண்களை சில நிமிடங்கள் சொல்லிவிட்டு மறந்து விடுவோம். மாறாக வேறு சிலரது எண்களை தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் கூறுவோம். எனவே நினைவாற்றல் என்பது நமது தேவைகளைப் பொறுத்தும் அவசியத்தைப் பொறுத்தும் அமைந்து விடுகிறது. எனவே நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள நமது மனம் முயல்கிறது. தேவையற்றவைகளை மனம் மறந்து விடுகிறது. முன்பு செய்த செயல்களை திரும்ப எண்ணிப்பார்க்க வேண்டிய தேவை இல்லாது மறந்து போவது, மனத்தின் கட்டாயத்தில் மறந்து போவது, உடலியல் மாற்றத்தால் மறந்து போவது. இப்படியாக மறதிக்கு காரணங்களைக் கூறலாம்.

வனர் டிரியா மனத்தளர்ச்சியால் நேரும் ஒருவகை மறதி, தனக்குத்துன்பத்தை தரும் நிகழ்ச்சியில் இருந்து விடுதலை பெற மனம் ஒரு தற்காலியமான மறதியை ஏற்படுத்துகிறது.

நினைவாற்றல் வரை எளிய வழிகள்
மாணவர்களின் விஷயத்தில் படிப்பதற்கு உகந்த சூழ்நிலை, மனஅமைதி, ஆரோக்கியமான உடல் வளம் வேண்டும். ஊட்டச்சத்து குறைவினால் சிலருக்கு மறதி ஏற்படும். வல்லாரை போன்ற கீரை வகைகள் நினைவாற்றலை சிறிது மேம்படுத்தும். நினைவுக் கோளாறுகள் நீங்க யோகாசனப் பயிற்சிகள் மூலம் இந்த நிலையை முற்றிலும் மாற்ற வாய்ப்புண்டு.

<u>சிரசாசனத்தின் தனிச்சிறப்பு</u>

யோகாசன நிபுணர்களின் துணையுடன் இதனை பழகி வரும்போது மிகவும் அதிசயிக்கத்தக்க முறையில் ஞாபக சக்தி உருவாகும். நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள முதலில் கவனம் செலுத்தும் பொழுதில் ஈடுபாடும் ஆர்வமும் வேண்டும். முழுக்கவனத்தையும் அதில் செலுத்தாவிடின் நினைவுகொள்ள முடியாது. உதாரணமாக உங்கள் நண்பரிடம் ஒரு பேனாவை (Pen) கொடுங்கள், ஒரு நிமிடம் கழித்து அதனைத் திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள். பேனாவைப் பற்றிய விபரங்களைக் கேளுங்கள். சிலவற்றையே அவரால் கூறமுடியும். மறுதடவை அந்தப் பேனாவை அவரிடம் கொடுத்து அதன் நிறம் அமைப்பு என்பவற்றை பகுதி பகுதியாக பிரித்து அதன்மீது கவனம் செலுத்தச் செய்யுங்கள். இந்தமுறை அவரால் பேனாவைப் பற்றிய முழுவிபரத்தையும் கூறமுடியும். குறுகியகால நினைவு நீண்டகால நினைவாக மாறி படித்தவற்றை புரிந்து கொண்டு மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும். வாய்விட்டு உரத்துப் படிப்பதில் சில அனுகூலங்கள் உண்டு. இதில் புலன் உறுப்புகள் சம்மந்தப்பட்டுள்ளதால் கண் வழிச்செய்தி செவிவழியாகவும் மூளைப்புறச்செவிக்குச் சென்று பதிந்து விடுகின்றதை புலன் உறுப்புகளின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்வதால் நினைவை நீண்டகாலத்திற்கு நிலைத்திட செய்யமுடியும.



<u>சிரசாசனம்</u>

பிராணாயாமம், நாடிசுத்தி, தியானம் என்பனவற்றின் மூலம் மனதை ஒருநிலைப்படுத்தி ஞாபக சக்தியை அதிகரிக்கமுடியும். இவற்றைத் தினமும் ஆர்வத்துடன் பயிற்சி செய்து வந்தால் உடல் ஆரோக்கியத்துடன் நினைவாற்றலை வளர்த்துக் கொள்ளமுடியும்.


pundit prithipal





astrologer

*Solutions for black magic, evil spirits, drinking problems, family related problems, money problems, love relationships, and much more!*

*Forecasting includes, palm readings, sun sign analysis, name readings, birthday readings, love and health, and money chances*

*CALL TODAY at 905-678-8932!*





**Pundit Prithipal**
26 Sledman St.
Malton, ON
L4T 1K5

tel: 905-678-8932
fax: 905-612-0906
cell: 416-219-7054
e-mail: pundit@punditprithipal.com
website: www.punditprithipal.com

**Free Consultation! Call for help today - "I understand your Problems"**



# INCOME TAX



Tarsem Parmar

- **Incorporation**
- **Business Set-up & Registration**
- **Accounting & Bookkeeping**
- **Payroll, G.S.T. & P.S.T.**
- **Incomes Taxes** (Free E-File)
- **CCRA Audit and Appeals**

# FINANCIAL SERVICES



- **Mortgages**
  upto 1.5% below the bank posted rates
- **Lines of Credit**
- **Business Loans**
- **Personal Loans**

## PERMANENT RESIDENT CARDS

**Free Applications filled for Seniors for PR Cards**
**Special Discounted rates to Taxi/Truck Operators, Serving the community since 1992**

**Scarborough & Markham Area**
**416-937-1563**
2 Irenemount Cres., Markham
(Markham Rd./Steeles Ave.)

**Brampton**
**416-937-1563**
8 Strathearn Ave., Unit 1
(Dixie/Steeles)



# ஞானம்ஸ் ஸ்ருடியோ

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12

Professional Photographer - கதிர்

**416 - 750 - 8118**

2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough





YARL

# WINDOW COVERING


உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

BLINDS
DRAPERIES AND
SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE

இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.



5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

விபரங்களுக்கு: என். செல்வம்
**416.332.8482 /416.419.9247 / 905.201.7733**



# நாமும் நமது இல்லமும் 168

தமிழ் மக்களின் அபிலாசைகளில் ஒன்று வீடுவாங்குதல். அவர்களுடைய வாழ்வில், பொதுவாக கனடாவில் பெரியதொரு முதலீடாகக் கொள்ளலாம். இத்தகைய முதலீடு செய்பவர்கள் மிகக் கவனமாக இருத்தல் நல்லது. பிழையான தகவல்களைக் கொண்டு, தவறான முடிவுகள் எடுப்பது பாரதூரமான விளைவுகளைக் கொடுக்கும்.

புதிதாக நிர்மாணிக்கும் வீடுகளை வாங்குபவர்கள் இந்த விடயத்தில் கவனமாக இருத்தல் சிறந்தது. வீடுவாங்குதல் / விற்றலிற்கான பத்திரத்தில் ஒப்பமிடமுன்னர் இந்த தொழிலில் அநுபவமிக்கவர்களின் ஆலோசனை பெறுதல் ஆரோக்கியமான விளைவுகளைத் தரும். அண்மையில் வீடுவாங்கிச் சென்றவரின் கூற்றின்படி, தான் ஒப்பமிடும் போது, மாதந்தக் கொடுப்பனவு (அதாவது Maintenance Fee) இருப்பதே தனக்குத் தெரிந்திருக்கவில்லை என்று, இதுபோன்ற பல தகவல்களை அறியாமலே பலர் வீடு வாங்குவது கவலைக்குரிய விடயம். ஆண்டு 2003, முதல்பாதி கரையேறிவிட்டது. கனடா நாளும் வந்துபோயிற்று. வீட்டுச்சந்தை இதுவரை ஆரோக்கியமாகவே காணப்படுகின்றது. அடமான வட்டிவீதமும் ஏறி இறங்கிக் கொண்டு இருந்தாலும், 40 வருடத்தில் குறைந்த அடமான (மோட்கேஜ்) வட்டி வீதம் காணப்படுவது, வீட்டுச் சந்தைகளுக்கு ஒரு ஆரோக்கியத்தை கொடுப்பதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அண்மையில் கிடைத்த தகவல்களின்படி வீட்டின் சராசரிவிலை (ரொறொன்ரோ பெரும்பாகத்தில்) $295,053 ஐ அடைந்துள்ளது. இத்துடன் யூன் 2003 இல் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 8033ஐ அடைந்துள்ளது. ஒப்பீட்டளவில் யூன் 2002 இல் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 6627 ஆகும். இருந்தும், இந் 2003 இன் வீட்டுவிலையை விட யூன் 2003 இன் சராசரி வீட்டுவிலை 1%ஆல் குறைந்துள்ளது தெரிந்திருக்க வேண்டியது. மே 2003 இல் வீட்டின் சராசரி விலை $298,451. பல எதிர்பாராத விளைவுகள் கனடிய பொருளாதாரத்தில் ஏற்பட்டபோதிலும், உதாரணமாக நீண்ட குளிர்காலம், West Nile Virus, Sars, பொருளாதார இறக்கம், வேலை தேடுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, வீட்டின் விலையிலோ, விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றே கூறத்தோன்றுகின்றது.

மேலும் 1988/1989 இல் வீடுவாங்கியவர்களின் வீட்டுவிலை, இப்பொழுது உயர்வடைந்துள்ளது. இவர்கள், இப்பொழுது தமது வீடுகளை விற்று வேறு இடத்திற்கு மாறக்கூடிய சந்தர்பங்கள் தோன்றியுள்ளது. மேலும் கடந்த 6-7 வருடங்களில் வீடு வாங்கியவர்களிற்கும் வீட்டின் விலையில் குறிப்பிட்ட அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருப்பதால் இவர்களும் தாம் இருக்கும் வீட்டை விற்று வேறு வீட்டிற்கு மாறக்கூடியதாகவும் உள்ளது.

**ராஜா மகேந்திரன்**

இன்னொரு தகவலையும் அறிதல் நல்லது. யூலை 01,2001 இலிருந்து யூன் 30, 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கனடாவிற்கு வந்தவர்கள் 255,888. ஆனால் கனடாவை விட்டு வெளியேறியவர்கள் 71,042. எனவே இதனால் கனடாவின் மக்கள் அதிகரிப்பு 184,846 ஆகக் காணப்படுகின்றது. இதில் குறிப்பிடத்தக்கவர்கள் ஒன்ராரியோவை குறிப்பாக ரொறொன்ரோ பெரும்பாகத்தை தமது வதிவிடமாக்கிக் கொள்கிறார்கள்.

இப்படியான மாற்றங்களாலும் வீட்டு சந்தையில் விற்று / வாங்கும் வீடுகளின் அதிகரிப்பை காணக்கூடியதாக உள்ளது.

சில வீடு சம்பந்தப்பட்ட தகவல்கள்

யூன் 2003இல் விற்கப்பட்ட Trebஇல் இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை 12,353

யூன் 2002இல் விற்கப்பட இருந்த எண்ணிக்கை 8,909

யூன் 2003இல் சராசரி வீட்டுவிலை 295,053

வீடுமாற்று வரி (Land Transfer Tax ) கணக்கிடும் முறை

0 - $55,000 வரையான வீட்டுவிலைக்கான வரி = 0.005 x வீட்டுவிலை

$55,001 - $250,000 வரையான வீட்டுவரி = 0.01 x வீட்டுவிலை

$250,001 - $400,000 " " = 0.015 x வீட்டுவிலை

$400,001 - (மேலே) " " =0.02 x வீட்டுவிலை


**Raja M. Mahendran,** P. Eng.

Vice President/Sales Rep.

Office - Tel.: (416) 321-6969

Direct: (416) 315-9397

Email: raja@mahendran.ca



| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 4.49% |
| Prime rate | 5% |
| Bank rate | 3.25% |


கடன்கொடுக்கலாம்! வாங்கலாம்!

Mortgage/loans/line of Credit

* வீடு, வியாபாரம், சுயதொழில் - கடன் பெறலாம்.
* Down Payment ஒரு பிரச்சினையா? தயங்காதீர்கள்.
* 2nd, 3rd மோட்கேஜை - ஒன்றாக்கலாம்.





தொடர்புகளிற்கு:- ஜோஜ் பரந்தாமன்

**416-332-0933**

* வித்தியாசம் அறிய என்னுடனும் தொடர்பு கொள்ளலாம்*.



# ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை ஈழத்தமிழ் மகன் சோதீஸ் இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



THIS MONTH SPECIAL

3.8% FINANCING & LEASING

ALL 2003 VEHICLES ARE ON CLEARANCE SALE


**416-704-1179**

அலுவலக நேரம்

Mon, Fri, Sat: 9 am - 6 pm

Tues, Wed: 12 noon - 9 pm

4334 Kingston Rd, Scarborough






# J.A.B. TRAVELS & TOURS

Top Sales Award for Cathy pacific

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம் J.A.B TRAVELS & TOURS.

1185 DUNDAS ST. E., # 203 MISSISSAUGA ON

(905) 896-8320



# EDUCATION FUND SERVICES Inc.

The Children's Education Trust of Canada

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!



Siva Kanapathypillai

(Divisional Director)

சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-6044

Fax: 416-438-8532 Res: 905-472-1139

1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.

முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.



# விண்வெளி 123

**கனி**

## நட்சத்திரங்கள்

நோவா (Novea) என்பது லத்தீன் மொழியில் "புதியது" எனப் பொருள் கொடுப்பினும், நோவா வெடிப்பானது நட்சத்திரம் ஒன்றின் இறுதி நிலைக்கான வெடிப்பாகும். இந்த சுப்ப நோவா என்ற அதி இராட்சத நட்சத்திரம் ஒன்றின் வெடிப்பானது வானிலே மிக அரிதாக நடைபெறும் ஒரு நிகழ்வாகும். அதிலும் வெற்றுக்கண்களுக்குப் புலப்படக் கூடிய அளவில் நிகழ்வது மிகவும் அரியதாகும். 1609 ஆண்டு தொலைக்காட்டி கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர், வெற்றுக் கண்களுக்குப் புலப்படக்கூடியதான சுப்பநோவா எதுவும் நிகழவில்லை. ஆயினும் 1987ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி Ian Shelton என்ற வான வியலாளர் எமது மில்கிவே கலக்சியின் உபகலக்சி எனக்கூறப்படும் "மெகலானக் கூட்டத்தில்" (Megallanic cloud) ஒரு சுப்ப நோவாவை அடையாளம் கண்டார். 383 வருடங்களின் பின்னர் வெற்றுக் கண்களுக்குப் புலப்பட்ட இந்த சுப்பநோவா நிகழ்வானது மிகவும் முக்கியமான வான் நிகழ்வாகும். ஆயினும் இதுபற்றி துலக்க மாக ஆய்வு செய்ய முடியாது போய்விட்டது.

மிகவும் அரிதான சுப்பநோவா நிகழ்வு பற்றிய பதிவுகள் சரித்திரத்தில் மிகவும் குறைவாகவே உள்ளது. கிறிஸ்துவின் பின் 1006 இல் அரேபிய வானவிய லாளர்களின் குறிப்பின்படி சுப்ப நோவாவை அடையாளம் காட்டுகின்றது. அதன் பின்னர் 1054 சீனர்கள் கூறிய "விருந்தாளி நட்சத்திரம்" சுப்பநோவா நிகழ்வொன்றை கண்டு கொண்டோம். இதனை அடுத்து 1572 இல் ரைக்கோ சுப்பநோவா (Tycho Super Novea) வையும், 1604 இல் கெப்பிளர் சுப்பநோவா (Kepler Super Novea) ஐரோப்பிய வானவியலாளர்கள் கண்டு கொண்டதற் கான சரித்திரக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

நமது முன்னோர்கள் காலத்திற்கு காலம் வானிலே கண்ட விருந்தாளி நட்சத்திரங் கள், அடையாள நட்சத்திரங்கள் எல்லாம் கூட சுப்பநோவா நிகழ்வுகளாக இருக்க லாம் என்பது இன்றைய வானவியலாளர் களின் கருத்தாகும். நமது கதைகளில் சரித்திரங்களில் கூட சிறப்பான சில அம்சங்கள், பிறக்கும் போதும் இராட்சியங் கள் தோன்றும் போதும் வானிலே சில பிரகாசமான நட்சத்திரங்கள் தோன்றி மறைந்ததாகக் கூறுவார்கள். சரியாக இடம் குறிப்பிடப்படாத இவ் அடையாளங் கள் கூட சுப்பநோவாவின் விளைவாகவே இருக்கவேண்டும் என்று கருத இடமுண்டு.

விவிலியக் குறிப்பின்படி தேவபாலன் உலக ரட்சகர் யேசுநாதர் பிறந்தபோது கிழக்கிலே இருந்து மூன்று சாஸ்திரிகளை ஒரு புதிய பிரகாசமான நட்சத்திரம் வழிநடத்திக்கொண்டு வந்ததற்கான குறிப்புகள் உண்டு. ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு மேல் காணப்பட்டிருக்க லாம் என்று கருதப்படும் இந்த புதிய நட்சத்திரம் கூட ஒரு 80 சுப்பநோவா இருக்குமோ என்பது இக்கால வான வியலாளர்களின் ஐயம். "Christmas Star" நத்தார் நட்சத்திரம் என்று கூறப்படும். இந்த நட்சத்திரத்தினை வானவியலாளர் கள் இன்றும் தேடிக்கொண்டு இருக்கின்றார்கள்.

நட்சத்திரம் ஒன்று அழியும்போது சுப்ப நோவா என்று அழகிய நிகழ்வு ஏற்படுகின்றது. வானிலே பல சுப்பநோவா நட்சத்திரங்கள் இன்று நவீன தொலைக் காட்சிகளின் ஊடாக காண்கின்றார்கள் வானவியலாளர்கள். நான் ஏற்கனவே கூறிய நண்டு நெடிலா போன்று பல சுப்ப நோவாவின் வெளிப்பாடான தூசுக் கூட்டங்களை வெகு அவதானமாக வான சாஸ்திரிகள் கவனித்துக்கொண்டு வரு கின்றார்கள் வெவ்வேறுவடிவில் வெவ் வேறு நிறங்களில் காணப்படும் இந்த சுப்ப நோவாவினால் ஏற்பட்ட இந்த நெடிலாக் களின் மத்தியில் வெற்றிடம் ஒன்று இருப்பது போல் தோற்றும். மிகவும் அழகாகத் தோன்றும் இந்த நெடிலாக் களை தொலைக்காட்சிகளில் Space Channel Discovery channel இலும் பார்க்கலாம்.

இத்துடன் இன்று நிறைவு செய்து கொண்டு அடுத்த முறையில் White Dwarfs என்றும் வெண்குள்ளர்கள் எனும் நட்சத்திரங்களில் பார்ப்போம்.


**COLOMBO PHOTO STUDIO**
(DIVISION OF ST. FRANCIS PHOTO)
DIGITAL PHOTO STUDIO


WEDDING,
BIRTHDAY,
ARANKETTAM,
BABY PHOTO,
FAMILY PORTRAIT,
PASSPORT, CITIZEN,
PUBERTY CEREMONY,
P.R CARD, ID PHOTO
ETC.........

416 752 4444



"Professional Photo & Videography
All Types of Video & Photographics Work"

Digital Special Effect
From $25.00



BESIDE THE 41 DIVISION POLICE,
KANCHI SILK
& PRIYA CONVENIENCE PLAZA

FREE FREE FREE
2 - 5 x 7 Studio Portrait
Enlargement Free
(Couple or Family)
With Purchase of any
Passport, Citizen,
Permanent Resident Card,
ID Photo
(Picture Value $20.00)

CEDARFACE PLAZA
2296 Eglinton Ave. East
Unit #6, Lower Level (Basement)
(Birchmount & Eglinton)
SCARBOROUGH


DIGITAL VIDEO TRANSFER
ANY TO ANY SYSTEM PAL, NTSC, SECAM
FROM VIDEO CASSETTE TO VCD OR DVD



Sales Agents Are Welcome

**HOMELIFE/GTA Realty Inc.**
1711 McCowan Rd., Suite #206, Toronto, ON M1S 3Y3
Office - Tel.: (416) 321-6969 Fax: (416) 321-6963

**வாங்க! விற்க! வீடு, வியாபாரம் வாங்க**
**இவை சம்ந்தமான ஆலோசனைகளுக்கு....**



**Justin William**
**416-803-7344**



**Keth Kethees**
**416-275-5788**



**Nel Ketha**
**416-677-4707**



**Param G.**
**416-230-1107**



Prince Willam Crt.
Markham & Sheppard
$259,900



Bimbrok Rd.
Eglinton & Midland
$274,900




Rochman Blvd
Lawrence & Bellamy
$279,900




Birrell Ave.
Finch & Morningside
$274,900



Morningview Tr.
Morningside & Finch
$329,900




Hupfield Tr.
Morningside & Sewells
$339,900



Treetops Crt.
Mccowan & Mcnicoll
$230,900



Hackmore Gate
Mavis & Hwy 7
$259,900



**Sasi Selva**
**416-725-1125**



**Siva Sharmaa**
**416-666-5515**

எமது நிறுவனத்தில் இணைந்து கொள்ள... ராஜா மகேந்திரன் @ 416 315-9397

# விளையாட்டுத் தகவல்கள் - 127



உதைபந்தாட்டம்

"ஆனைக்கும் அடி சறுக்கும்". உலக கிண்ணத்தை வென்று புகழ் படைத்த பிரேசில் அணி....

பிரான்ஸில் நடைபெற்ற கொன்ஃபெடரேஷன் கோப்பை கால்பந்துப் போட்டியின் அரையிறுதிக்கு துருக்கி தகுதி பெற்றது.

செயின்ட் எடின்னேவில் நடைபெற்ற ஆட்டத்தில் துருக்கி 2-2 என்ற கணக்கில் உலக சாம்பியன் பிரேசிலுடன் Draw கண்டது. துருக்கி தரப்பில் கோக்டெனிஸ் காராடெனிஸ், ஓகன் யில்மாஸ், பிரேசில் தரப்பில் அட்ரியானோ அலெக்ஸ் கோல் அடித்தனர். 'B' பிரிவில் ஆப்பிரிக்க சாம்பியன் கமரூன் 7 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தது. துருக்கி, பிரேசில் தலா 4 புள்ளிகள் எடுத்திருந்தாலும், லீக் ஆட்டங்களில் பிரேசிலை விட துருக்கி (4 கோல்கள்) ஒரு கோல் அதிகம் போட்டிருந்ததால் அரையிறுதிக்கு துருக்கி தகுதி பெற்றது. அரையிறுதியில் நடப்பு சாம்பியனும், ஐரோப்பிய சாம்பியனுமான பிரான்சுடன் துருக்கி மோதியது. லியானில் நடைபெற்ற மற்றோர் அரையிறுதியில் தென் அமெரிக்க சாம்பியமான கொலம்பியாவுடன் கேமரூன் விளையாடியது.



இறுதியாட்டத்தில் கமரூன்னை பிரான்ஸ் மேலதிக நேரத்தில் (Golden Goal) மூலம் 0:1 என்ற கோல் விகிதத்தில் வென்று பிரான்ஸ் FIFA CONFEDERATION கிண்ணத்தை வென்றெடுத்தது.

பிரேசிலின் இளம் வீரர்க்கு பல கழகங்கள் வலைவீச்சு!!



உலகக் கால்பந்துப் புகழ் ரொனால்டினோவைக் 'கைப்பற்ற' இங்கிலாந் தில் உள்ள 3 கழகங்கள் பெரும் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. இங்கிலாந்து வீரர் டேவிட் பெக்ஹாமைத் தொடர்ந்து தற்போது பரபரப்புக்குள்ளாகியுள்ள பெயர் ரொனால்டினோ. இவர், தற்போது பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் கழகத்துக்காக ஆடி வருகிறார். ஸ்பெயினைச் சேர்ந்த றியல் மாட்ரிக், இங்கிலாந்தின் மான்செஸ்ரர் யுனைட்டெட், செல்சியா அணிகள் ரொனால்டினோவை இழுக்க கடும் போட்டியிட்டு வருகின்றன. ஆனால் அவர் எந்த அணிக்கு விளையாடுவார் என்பது இவ்வார இறுதியில் தான் தெரியவரும். ரியல் மாட்ரிட், மான்செஸ்ரர் அணிகளுடன் பாரீஸ் செயின்ட் ஜெர்மன் தலைவர் பிரான்சிஸ் கிரெய்ல் பேச்சு நடத்தி வருகிறார். 25 மில்லியன் யூரோ தருவதற்கு யுனைட்டெட் அணி தயாராக இருந்தும் அதை கிரெய்ல் நிராகரித்து விட்டதாகக் கூறப்படுகிறது. ரொனால்டினோவை ஒப்பந்தம் செய்வதில் தற்போதைக்கு ரியல் மாட்ரிட் அணிக்கு வாய்ப்புள்ளது என கிரெய்ல் தெரிவித்தார். ரொனால்டினோவுக்காக ரியல் மாட்ரிட் அணி (40 மில்லியன் டொலர்) பாரீஸ் செயின்ட் ஜெர்மைனுக்கு வழங்கும் என ரியல் மாட்ரிட் வட்டாரங்கள் தெரிவித்தன. ரியல் மாட்ரிட் ஏற்கெனவே 12 மில்லியன் யூரோ கொடுத்து விட்டதாக வட்டாரங்கள் கூறினாலும், அது குறித்து கருத்து தெரிவிக்க மாட்ரிட் கழகம் மறுத்துவிட்டது.

## எஸ். கணேஷ்

2 ஆண்டுகளுக்கு முன் பிரேசிலின் கிரெமியோ போர்ட்டோ அலிக்ரே கிளப்புக்கு 6.5 மில்லியன் யூரோ கொடுத்தது. பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் எனினும், ரொனால்டினோ 6 மாதம் ஸ்ட்ரைக்கில் ஈடுபட்ட பின்னரே அவரை பிரேசில் கழகம். ரியல் மாட்ரிட் அணிக்கு ரொனால்டினோ வரும் பட்சத்தில், போர்த்துக்கலின் லூயிஸ்ஃபிகோ வேறு கழகத்துக்கு மாறலாம். ஏற்கனவே, இங்கிலாந்தின் டேவிட் பெக்ஹாம் ரியல்மாட்ரிட் அணியில் சேர்ந்ததில் இருந்தே லூயிஸின் இடம் ஆட்டம் கண்டுள்ளது.

ரெனிஸ்



செரீனாவுக்கு முதலிடம்!

டென்னிஸ் வீராங்கனைகள் பட்டியலில் முதலிடத்தை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தக்கவைத்துக் கொண்டார்.

முடிவுற்ற விம்பிள்டன் போட்டிக்கு பின் மகளிர் டென்னிஸ் சங்கம் (டபிள்யூடிஏ) தரவரிசைப் பட்டியலை திங்கள்கிழமை வெளியிட்டது.

தரவரிசை விவரம்:

| வீராங்கனை, | நாடு, | பெற்றுள்ள புள்ளிகள் வரிசையில் |
|---|---|---|
| (1) செரீனா வில்லியம்ஸ் | (யு.எஸ்) | 6,060; |
| (2) கிம் கிளைஸ்டர்ஸ் | (பெல்ஜியம்) | 5,721; |
| (3) ஜஸ்டின் ஹெனின் | (பெல்ஜியம்) | 4,705; |
| (4) வீனஸ் வில்லியம்ஸ் | (யு.எஸ்) | 4,126; |
| (5) லின்ட்ஸே டேவன்போர்ட் | (யு.எஸ்) | 3,626 |
| (6) அமேலி மௌரேஸ்மோ( | பிரான்ஸ்) | 2,932; |
| (7) ஜெ:பர் காப்ரியாட்டி | (யு.எஸ்) | 2,578; |
| (8) சந்தா ரூபின் | (யு.எஸ்) | 2,434; |
| (9) டேனியலா ஹான்டுகோவா | (ஸ்லோவேகியா) | 2,078; |
| 10) அனஸ்டாசியா மிஸ்கினா | (ரஷியா) | 1,990 |

கிரிகெட்

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?


மேற்கிந்திய தீவுகளின் உள்ளூர் ஆட்டமொன்றில் 319 ஓட்டங்கள் விளாசி விவியன் ரிச்சர்ட்ஸ் மகன் மலி ரிச்சர்ட்ஸ் (19) புதிய சாதனை நிகழ்த்தினார்.

கம்பைன்டு வெர்ஜின் ஜலண்டு அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆன்டிகுவா அன்டு பார்புடா அணியின் மலி ரிச்சர்ட்ஸ் 420 பந்துகளில் 6 சிக்கர்கள், 22 பவுண்டரிகளுடன் 319 ஓட்டங்கள் விளாசினார். 90 ஆண்டு கால லீவர்ட் ஜலண்டு கிரிக்கெட் போட்டியில் தனி வீரருக்கான அதிகபட்ச ஸ்கோர் இதுதான். 1997இல் கம்பைன்டு வெர்ஜின் ஜலண்டுக்கு எதிரான ஆட்டத்தில் ஆங்கில்லாவின் அலெக்ஸ் ஆடம்ஸ் 318 ஓட்டங்கள் விளாசியதே முந்தைய சாதனை.

சனிக்கிழமை தொடங்கிய 3 நாள் ஆட்டத்தின் முதல் நாள் உணவு இடைவேளைக்கு முன் 47 ஓட்டங்களுக்கு விர்ஜின் ஜலண்டு ஆட்டமிழந்தது. ஆன்டிகுவா 789 ஓட்டங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை ஆட்டமிழந்தது.


NTE AUTO

New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிட உரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு

பாதிக்கப்படும்








416 490-9199

S.K.THEESAN
எஸ்.கே.தீசன்

www.kalakalappu.net

கலகலப்பு தீசன் 416-490-9199

# இளமையோடு என்றும் இருப்பதற்கான வழிமுறை

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா என்பதற்கமைய மண்ணில் பிறந்து திண்ணிய தாய் வலுப்பெறும் உயிர் எண்ணம் போல் வாழ்ந்து முடிவில் விண்ணுலகம் சென்று விடுகின்றது. பிறந்தன இறத்தல் உலக இயற்கை. மகனை உயிர்ப்பிக்க சாவு நிக ழாத வீட்டில் கடுகு வாங்கிவர தாயைப் பணித்த புத்தபிரான் சாவு இயற்கை என்பதை மறைமுகமாக உணர்த்தினார். வாழ்க்கை வாழ்வதற்கே என்றாலும் சிலர் இளமையிலும் - மேலும் சிலர் நடுவயதிலும் அனேகர்கள் முதுமையிலும் மரணிக்கின்றனர். இளமை யில் மரணிப்பது இன்னல் நிறைந்தது. நடுத்தர வயதில் மரணமாவது குடும்பத்திற்கு நட்டமானது. முதுமையில் இயற்கை எய்து வது இயல்பானது. நூறு வயது வாழ் கின்றேன் என்று கண்ணவிந்து, காதடைத்து, நடக்கமுடியாத கிடுகிடு கிழமாய் வாழ்வது நல்லதா என்ற கேள்வியும் எழவே செய்கின் றது. தள்ளாத வயதில் தானும் சங்கடப் பட்டுக் கொண்டு பிறரையும் சங்கடப்படச் செய்வது நல்லதா? இத்தகைய நரக வாழ்க்கை எல்லோர்க்கும் வெறுப்பூட்டி விடு மல்லவா! எனவே வாழ்க்கையை இறுதி வரை இன்பமாய் நடத்துவதற்கு எப்பொழுதும் இளமையாய் இருப்பது தான் ஒரே வழி அது எப்படிச் சாத்தியம் என்று பார்ப்போம்.

வயது ஆகஆக உடல் அழகும் வலிமையும் அறிவாற்றலும் குறைந்து விடுகின்றன என்பது உண்மைதான். இளமையோடு இருப் பது என்பது முதலில் மனோ நிலையைப் பொறுத்தது எனலாம். மனத்தானாம் மாண்பு என்பதற்கமைய மனம் திடமாகவும் உறுதியாகவும் இருந்தால் எனக்கு என்ன வயதாகி விட்டதா அந்தக் காரியத்தை என்னால் செய்ய முடியுமா என்று அங்கலாக் காமல் என்னால் எதையும் செய்ய முடியும் என்று மார்தட்டிக் கொள்வதே இளமையோடு இருப்பதற்கு வித்து எனலாம். முதுமையில் இளமை உணர்வோடு வாழப் பழகிக் கொள்ளவேண்டும். எனவே எண்ணமே ஒருவரை ஆக்குவிக்கிறது, ஊக்குவிக்கிறது என்றும் இளமையோடு இருப்பதற்கு இளமை உள்ளம் படைத்திருப்பது முற்றிலும் அவசி யம் மனந்தளரும் போது கவலையும் சோகமும் நம்மை ஆட்டிப் படைப்பதால் உண்மையான வயதிலும் பார்க்க பத்து வயது கூட்டியே காட்டிவிடுகின்றது. அகத் தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற் கேற்ப மனம் கள்ளமில்லாமல் தெள்ளியதாய் இருந்தால் இளமையும் பொலிவும் முகத்தில் தென்படும். கவர்ச்சியான உடற்கட்டும் வசீகரமான முகவெட்டும் இயற்கையின் கொடை இளமை நலத்தின் ஏற்றம் என்று கருதாமல் முயற்சியின் பெறுபேறு என்று கருதினால் இளமை நிலைக்கச் செய்யலாம். வாழ்க்கைப் பாதையைப் பின் நோக்கிப் பார்க்காமல் அசௌகரியமான சூழ்நிலைக ளிலும் மனதைப் பேதலிக்க விடாமல் உன்னால் முடியும் தம்பி என்று

**நா. க. சிவராமலிங்கம்**

உற்சாகமுடன் செயற்பட்டால் இளமை இழையோடி நிற்கும்.

கவலை உடலமைப்பிலும் உள்ளத்திலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடுகின்றது. கறையான் ஏட்டை அரிப்பதைப் போன்று கவலை நமது உடம்பை அரித்து சோகச் சித்திரமாக்கி விடுகின்றது. வாழ்க்கைப் பாதையில் நடந்து செல்லும் ஒருவனுக்கு ஆங்காங்கே சுமைதாங்கிகள் வேண்டும். பாரத்தை சற்று இறக்கி வைத்து விட்டுக் களைப்பாற்ற வழியில்லை என்றால் வாழ்க்கைப் பயணம் சலிப்புத்தட்டி விடுமல்லவா? கவலையை மற்றவர்களுடன் பகிர்வதன் மூலமும் அன்பையும் அநுதா பத்தையும் பெறுவதன் மூலமும் கவலையை விரட்டிக் களிப்படையலாம். அப்பொழுது இளமை மிளிரும்.

உடற் சுத்தமும் உடைச் சுத்தமும் ஒருவனிடத்தில் இளமை இடங் கொள்ள வகை செய் கிறது. சுத்தம் சுகம் தரும் என்பதற் கேற்ப நமது உடலையும் பற்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தலை முடியை கிரமமாக வெட்டுவதும் முகச்சவரம் செய்வதும் இளமையைப் பளிச்சிடச் செய்வன ஆகும். ஒருவன் தனக்காக உண வருந்துகின்றான். ஆனால் பிறருக்காக உடையணிகின்றான் எனக் கூறப்படுகின்றது. ஆடையும் அணிகலன்களும் அழகு மிளிரச் செய்து இளமை பொலியச் செய்கின்றன. ஆள்பாதி, ஆடைபாதி என்பதனால் நேர்த்தி யாக உடையணிபவர் இளமைத் தோற்றத்து டன் காணப்படுவார்.

அன்னம் சுத்தமானால் எண்ணம் சுத்தமாகும் எனப்படுகின்றது. எனவே சுத்தமான, சுவை யான சத்துள்ள உணவை உட்கொள்வதன் மூலம் ஆரோக்கியமாகவும் இளமையுடனும் விளங்கலாம். நாவின் சுவைக்கு உணவு என்றில்லாமல் உடல் ஆரோக்கியத்திற்கு உணவு என்றிருக்க வேண்டும்.

சுவாசப்பயிற்சியும் ஒழுங்கான தேகப்பயிற்சி யும் செய்வதன் மூலம் சுகநலத்துடனும் இளமையுடனும் விளங்கலாம். தேகப்பியா சங்கள் உடலை உறுதியாக வைத்திருக்க உதவுகின்றன. விசையுறுபந்தினைப் போல் வேண்டியபடி உடலைப் பெறுவதற்கு இவை உதவுகின்றன.

உழைப்பு ஒய்வு இரண்டும் அவசியம். உழைப்பு என்று உடம்பை நோய்க்கு ஆளாக்கி விடாமலும் ஒய்வு என்று சோம்பேறியாகி விடாமலும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். உழைப்பிடைப்பட்ட ஒய்வு தான் முக்கியம். அப்பொழுது தேக காயம் பாதிப்படையாது.

முடிவில் முறையான ஒழுக்கசீலமான வாழ்வு வாழ்ந்தால் குறையொன்றும் இருக்காது. அதுவே நிறைவாழ்வு இறை அருள் துணையாகும் வாழ்வு. அதில் இனிமையும் இளமை நலமும் மிக்கொளிரும் மூப்பினுக்கு இடங்கொடேல்.




CLEANING

• வீட்டு CARPET கழுவுதல் • CAR சம்போ Cleaning

அழையுங்கள் நேசன் - 416 - 332 - 1463

Cell - 416-716-0629

**New Kalyani Catering & Take out**




**292 Markham Road, Scarborough, Ontario**

**416-261-9774**



**நியூ கல்யாணி தனது 9 ஆவது வருடத்தை முன்னிட்டு வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை May 15th, 2003 தொடக்கம்...**

**வாரத்தில் ஏழு நாட்களும்**

**Lunch Special**

| | |
|---|---|
| Madras chicken Buriyani | $3.99 |
| Jaffna Buriyani | $4.99 |

**Dinner Special**

| | |
|---|---|
| Megoring Noodles Chicken *(Malasiyan Style)* | $3.99 |

**சனிமுதல் - ஞாயிறு வரை**

**Lunch Special**

முத்துச்சம்பா 10 பதார்த்தங்களுடன் வாழையிலையில்

**Dinner Special**

*கொத்து ரொட்டி(கோழி, ஆடு, மாடு)*


வாரத்தில் ஏழு நாட்களும்

**இடியப்பம் 6¢**

500க்கு மேல் கொள்வனவு செய்தால் 5¢

ரொட்டி (பறோட்டா) 50¢

100க்கு மேல் கொள்வனவு செய்தால் 40¢



**ஒவ்வொரு திங்கள் முதல் - புதன் வரை Lunch Special**

Vegitable Thali $2.99

***Dinner Special***

Singapore Noodles $2.99

**ஒவ்வொரு வியாழன் முதல் - வெள்ளி வரை**

**Lunch Special**

விரதச் சாப்பாடு 10 பதார்த்தங்களும் வழங்கப்படும் $3.99

***Dinner Special***

| | |
|---|---|
| மசாலா தோசை | $2.49 |
| Plan தோசை | $1.99 |
| 5 இட்லி | $1.99 |

(சாம்பார், சட்னி இலவசம்)

**சனி, ஞாயிறு- தீவக மக்களின் முறைப்படி விஷேசமாக தயாரிக்கப்படும் கூழ் $3.99**

எந்த நேரத்திலும் எவ்வளவு ஆனாலும் ஓடராக செய்து பெற்றுக் கொள்ளலாம். மற்றும் (Ceylon Bakery பாண் வகைகள், Cake வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து சிற்றுண்டி வகைகளும் மலிவு விலையில் செய்து தரப்படும். எந்த விதமான கொண்டாட்டங்களானாலும் மலிவு விலைகளில் **Catering** செய்து தரப்படும்.

# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் என் மனப்பான்மை தான் என் வாழ்வை நிர்ணயிக்கின்றது. ஆகவே பிரச்சனை வரும் போது எனது மனப்பான்மை மாறுமட்டும் நான் துக்கப்பட்டுக் கொண்டே துன்புறுவேன் என்பதை நான் உணர்ந்ததும் எனது வாழ்வு வளம் பெறும். ஓயாத அலைகளாய் எதிர்வரும் சவால்களைச் சமாளிப்பது தான் மானிட வாழ்வு என்பதைப் பலர் முதுமையிலும் கூட உணர்வதில்லை. வாழ்வில் ஏதாவது ஒரு பிரச்சனை ஏற்படும்போது, நாம் அதை நோக்கும் எமது மனப்பான்மையை மாற்றினால் ஒழிய, எமது கோபம், ஆத்திரம், வெறுப்பு போன்ற எதிர்மறை உணர்வுகள் எம்மை வாட்டித் துன்புறுத்திக் கொண்டேயிருக்கும்.

பிரியமானவர்களே! வாழ்க்கையில் உங்களுக்கு ஏற்பட்டுள்ள ஏதாவது ஒரு பெரிய சவாலை சரிவர எதிர்கொண்டு சமாளிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றீர்களா? வாழ்க்கையே கசந்து விட்டதா? திறமையாக நீங்கள் செயற்படும் போது கூட, ஒருவர் அல்லது ஏதோ ஒன்று திடீரென்று கிளம்பி ஒரு முட்டுக் கட்டையாகி உங்களைத் தடுக்கின்றதா?

இது உங்களையே நீங்கள் அவதானித்து ஒரு சுய அலசல் செய்ய வேண்டிய கட்டாயத்தையே உங்களுக்கு உணர்த்துகின்றது. உங்களுக்குள்ளே நீங்கள் சிருஷ்டித்திருக்கும் உலகில், நீங்கள் எப்படி இருக்கின்றீர்களோ, அப்படியே அதே மாதிரிதான், அதன் பிரதிபலிப்பாகத்தான் உங்கள் வெளி உலகும் அமையும். ஆகவே வெளியில் ஏற்படும் பிரச்சனை, "உனக்குள் பிரச்சனை இருக்கின்றது, அப்பிரச்சனையைத் தீர்த்திட உன் கவனத்தைத் திருப்பு", என்பதைத் தான் உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றது.

ஆமாம் உனக்குள்ளே நீ வாழும் அந்தரங்க வாழ்க்கை ஒன்று இருக்கின்றதே, அதற்கு உனது அன்பு, அரவணைப்பு ஆதரவு, கவனம் எல்லாம் மிக மிகத் தேவை. உனது வாழ்வில் நீ முதலாவதாகச் செய்யவேண்டியது உன் அந்தரங்க வாழ்வை நன்கு அவதானித்துச் சுத்தப்படுத்தி நல்ல முறையில் பலப்படுத்துவதேயாகும். இதை உனக்காகச் செய்து தர வேறு ஒருவராலும் இயலாது. உன்னால் மட்டுமே இதை உனக்காகச் செய்து கொள்ள முடியும். நீ விரும்பும் சகலதுமாக நீ விளங்குவது உனது பொறுப்பு. மற்றவர்கள் எப்படி எப்படி இருக்க வேண்டும் என நீ விரும்புகின்றாயோ, அதேமாதிரி நீயும் உன் விருப்பப்படி இருப்பது உனது பொறுப்பு. நீ ஆசைப்படும் யாவற்றையும் வேறு ஒருவரும் உனக்கு கொடுக்க மாட்டார்கள். நீ விரும்பியவற்றை உன் வாழ்வில் நீயே தான் நிர்மாணிக்கின்றாய். ஆகவே பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா சொல்வது போல, உனது உள்ளும் புறமும் ஒத்திருப்பது உனது பொறுப்பு. ஆனால் கவனம் தேவை. மனதில் பட்டதையெல்லாம் வெளியில் சொல்வதும் பிரச்சனையைக் கொண்டு வரலாம். ஆகவே வாக்கில் கவனம் அத்தியாவசியம்.

